வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி 12.2.2026 நேரம் மாலை 6.10 மணி

-----------------------------------------------------------------

<u>தலைப்புச் செய்திகள்</u>

- புதுடெல்லியில், பிரதமர் அலுவலகம் போன்ற முக்கிய அலுவலகங்கள் அடங்கிய, சேவா தீர்த் கட்டிட வளாகத்தை, பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை திறந்து வைக்கிறார்.
- அமெரிக்கா உடனான வர்த்தக பேரத்தை தொடர்ந்து, இந்தியாவின் வர்த்தக உபரி, 90 பில்லியன் டாலரைத் தாண்டி அதிகரிக்கும் என்று, பாரத ஸ்டேட் வங்கி, ஆய்வறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.
- கல்வித் துறையில், செயற்கை நுண்ணறிவுத் தொழில் நுட்பத்தின் ஒருங்கிணைப்பை, அரசு, தொடர்ந்து வலுப்படுத்தி வருவதாக, மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறி உள்ளார்.
- புதுச்சேரியில் இன்று நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில், வரவிருக்கும் நிதியாண்டின் முதல் 5 மாதங்களுக்கான, இடைக்கால பட்ஜெட்டை, முதலமைச்சர் திரு ரங்கசாமி தாக்கல் செய்தார்.

<u>ே□ாடி-கட்டிடம்</u>

புதுடெல்லியில், பிரதமர் அலுவலகம், அமைச்சரவைச் செயலகம், மற்றும், தேசிய பாதுகாப்பு கவுன்சில் அலுவலகம் போன்ற முக்கிய அலுவலகங்கள் ஒரே இடத்தில் செயல்படும் வகையில், புதிதாக கட்டப்பட்டுள்ள, சேவா தீர்த் கட்டிட வளாகத்தை, பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை திறந்து வைக்கிறார். மத்திய நிதி, பாதுகாப்பு, கல்வி, சுகாதாரம், மற்றும் தகவல்-ஒலிபரப்பு அமைச்சகங்களின் அலுவலகங்களை உள்ளடக்கிய, கர்த்தவ்ய பவன்-1, கர்த்தவ்ய பவன்-2 ஆகிய 2 கட்டிடங்களையும் பிரதமர் திறந்து

வைக்கிறார். மக்களின் தேவைகளுக்கு ஏற்ற, மக்களால் எளிதில் அணுகதக்க, திறம்பட்ட, நவீன நிர்வாக வசதிகளை, நாட்டிற்கு வழங்குவதில், பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு உள்ள உறுதிப்பாட்டின் பிரதிபலிப்பாக, இப்புதிய கட்டிடங்கள் அமைந்துள்ளன. பொது மக்கள் மற்றும் ஊழியர்களுக்குத் தேவையான எல்லா வசதிகளும், பாதுகாப்பு, கண்காணிப்பு மற்றும் அவசரகால ஏற்பாடுகளும், இக்கட்டிடங்களில், முழு அளவில் இடம் பெற்றுள்ளன.

**<u>ே□ாடி-சீதாரா□ன்</u>**

வரவிருக்கும் நிதியாண்டிற்கான மத்திய பட்ஜெட்டினால், பொருளாதாரத்தில் மாற்றம் கொண்டு வருவதற்கான நாட்டின் முயற்சிகள் எப்படியெல்லாம் பயன் பெறும் என்பது குறித்து, நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், நேற்று மக்களவையில் ஆற்றிய உரையில், விரிவான முறையில் விவரித்து இருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். மத்திய நிதியமைச்சரின் லோக்சபா உரை குறித்த வீடியோ ஒன்றையும் சமூக ஊடகத்தில் பிரதமர் பகிர்ந்து கொண்டுள்ளார். வேகமான சீர்திருத்தம், சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு ஆதரவு, கல்வி, திறன் மேம்பாடு, நவீன உள்கட்டமைப்பு வசதிகள் உட்பட பல்வேறு அம்சங்களை, நிதியமைச்சர் தமது உரையில் வலியுறுத்தி இருப்பதாக பிரதமர் மேலும் கூறி உள்ளார்.

**<u>□ாநிலங்களவை- விவாதம்</u>**

மாநிலங்களவையில், மத்திய பட்ஜெட் மீதான விவாதங்கள், இன்று மீண்டும் தொடங்கி நடைபெற்றன. பிஜேபி உறுப்பினர் திரு மதன் ரத்தோர், விவாதங்களில் பங்கேற்றுப் பேசுகையில், பிரதமர் திரு நரேந்திர மோடியின் ஆட்சியில், இந்தியா, உலகின் 4-ஆவது மிகப் பெரிய பொருளாதாரமாக மேம்பட்டுள்ளதாகவும், நாட்டின் மொத்த ஏற்றுமதி, முந்தைய ஆட்சியுடன் ஒப்பிடுகையில் 2 மடங்கு அதிகரித்து

இருப்பதாகவும் கூறினார். மொபைல் போன் உற்பத்தியில், உலகின் 2-ஆவது பெரிய நாடாக இந்தியா திகழ்வதாகவும், மொபைல் தொலைபேசிகளை ஏற்றுமதி செய்யும் நிலைக்கு இந்தியா உயர்ந்து இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். நாட்டில் மின் இணைப்பு இல்லாத 18 ஆயிரம் கிராமங்களுக்கும் மின் இணைப்பு கிடைப்பதை, பிரதமர் திரு நரேந்திர மோடி உறுதிப்படுத்தி இருப்பதாக அவர் மேலும் கூறினார். மற்றொரு பிஜேபி உறுப்பினர் திரு ஷம்பு பட்டேல், பட்ஜெட்டை வரவேற்று பேசுகையில், அனைத்து பிரிவு மக்களின் எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றும் வகையில் பட்ஜெட் அமைந்திருப்பதாக பாராட்டினார்.

<u>வர்த்தக பேரம்</u>

இந்தியாவிற்கும்-அமெரிக்காவிற்கும் இடையிலான வர்த்தக பேரத்தை தொடர்ந்து, அமெரிக்கா உடனான இந்தியாவின் வர்த்தக உபரி, 90 பில்லியன் டாலரைத் தாண்டி அதிகரிக்கும் என்று, பாரத ஸ்டேட் வங்கி, ஆய்வறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது. இதுகுறித்து ஒரு செய்தி தொகுப்பு .............

(வாய்ஸ்)

அமெரிக்க உடனான வர்த்தக உபரி அதிகரிப்பதால் இந்தியாவின் அன்னியச் செலாவணி கையிருப்பில் 3 பில்லியன் டாலரை சேமிக்க இதனால் ஏதுவாகும் என்று பாரத ஸ்டேட் வங்கியின் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 90 பில்லியன் டாலர் வர்த்தக உபரி என்பது, கடந்த ஆண்டின் உபரி அளவை விட, சுமார் 45 பில்லியன் அதிகம் என்றும், இந்த உயர்வு, நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில், சுமார் 1.1 சதவிகிதம் என்றும், எஸ்பிஐ தலைமை பொருளாதார ஆலோசகர் டாக்டர் சௌமிய காந்தி கோஷ் தெரிவித்துள்ளார். ஐரோப்பிய ஒன்றியத்துடன் அண்மையில் எட்டப்பட்ட வரியில்லா வர்த்தக உடன்பாட்டினால், 260

டாலர் மதிப்பிலான ஜவுளிச் சந்தையில் இறக்குமதி வரியின்றிப் பங்கேற்கும் வாய்ப்பு, இந்தியாவிற்கு கிடைத்திருப்பதாக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

***<u>க்களவை-தொழில் உறவுகள் (15)</u>***

2020-ஆம் ஆண்டு தொழில் உறவுகள் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவதற்கான மசோதா இன்று மக்களவையில், விவாதங்களுக்கு பின்னர் நிறைவேற்றப்பட்டது. 3 பழைய சட்டங்களுக்கு மாற்றாக நிறைவேற்றப்பட்ட புதிய தொழில் உறவுகள் சட்டத்தில், தவறான புரிதல்களை நீக்கி, புதிய சட்டத்தின் அமலாக்கத்தில் எதிர்கால குழப்பங்களை தவிர்க்கும் வகையில், திருத்த மசோதா அமைந்திருப்பதாக, மத்திய தொழிலாளர் துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா, அவையில் கூறினார். திருத்த மசோதாவில், பெரிய சீர்திருத்தம் எதுவும் இல்லை என்று, காங்கிரஸ் உறுப்பினர் திரு கொடிக்குன்னில் சுரேஷ், விவாதங்களைத் தொடக்கி வைத்துப் பேசுகையில் கூறினார். இளைஞர்களிடையே வேலை வாய்ப்பின்மை அதிகரித்து வரும் நிலையில், வேலை வாய்ப்புகளை பாதுகாப்பதற்கான சட்ட விதிகளை பலவீனமாக்கும் வகையிலேயே செயல்படுவதாக அவர் குற்றம் சாட்டினார். திருத்த மசோதாவினால், தொழிலாளர் நலன்களைப் பாதுகாக்கவும், தொழில் நிறுவனங்கள் வர்த்தகம் புரிவதை எளிதாக்கவும் ஏதுவாகும் என்று, பிஜேபி உறுப்பினர் திரு தர்ஷன் சிங் குறிப்பிட்டார்.

*<u>பிரதான்-ஏஐ</u>*

கல்வித் துறையில், செயற்கை நுண்ணறிவுத் தொழில் நுட்பத்தின் ஒருங்கிணைப்பை, அரசு, தொடர்ந்து வலுப்படுத்தி வருவதாக, மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறி உள்ளார். செயற்கை நுண்ணறிவின் தாக்கங்கள் குறித்த உச்சி மாநாட்டிற்கான முன்னோட்டமாக, புதுடெல்லியில் இன்று நடைபெற்ற பாரத் போதன்-ஏஐ மாநாட்டில் அவர் உரையாற்றினார். அமைச்சரின் உரை குறித்து ஒரு தொகுப்பு................

இந்தியாவின் கல்விக் கட்டமைப்பில், 3-ஆம் வகுப்பு முதல், ஆராய்ச்சி படிப்பு வரை எல்லா நிலைகளிலும், செயற்கை நுண்ணறிவு ஒருங்கிணைக்கப்படும் என்று, கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறினார். ஏஐ, ஒரு பாடமாக மட்டுமின்றி, புதுமையாக்க மற்றும் தகவல் தொடர்பு உத்தியாகவும் பயன்படுத்தப்படும் என அவர் தெரிவித்தார். செயற்கை நுண்ணறிவுத் துறையில் உலகின் முன்னணி நாடாக இந்தியாவை மேம்படுத்துவதே, பிரதமர் திரு நரேந்திர மோடியின் நோக்கம் என்றும், இந்த இலக்கை எட்ட, ஒவ்வொரு இந்திய மாணவரும், ஏஐ எழுத்தறிவு பெறுதல் அவசியம் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். மனிதர்களை மையமாகக் கொண்ட, நன்னெறிகளின் அடிப்படையிலான செயற்கை நுண்ணறிவுத் தொழில் நுட்பங்களுக்கே, இந்தியா முக்கியத் துவம் அளிப்பதாக அவர் மேலும் கூறினார்.

*<u>சட்ட□ன்றம்</u>*

புதுச்சேரியில் இன்று நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில், வரவிருக்கும் நிதியாண்டின் முதல் 5 மாதங்களுக்கான, 5 ஆயிரத்து 396 கோடி ரூபாய் இடைக்கால பட்ஜெட்டை, நிதித் துறைப் பொறுப்பு வகிக்கும் முதலமைச்சர் திரு ரங்கசாமி தாக்கல் செய்தார். நடப்பு நிதியாண்டின் கூடுதல் செலவினங்களுக்கு ஒப்புதல் பெறுவதற்கான சட்ட முன் வரைவும் அவையில் தாக்கல் செய்யப்பட்டது. மாநில அந்தஸ்து

இல்லாமல் தேர்தலை சந்திப்பதில் பயன் இல்லை என்றும், மாநில அந்தஸ்து பெற்ற பிறகு தேர்தலை சந்திக்கலாம் என்றும் சட்டப்பேரவையில் எதிர்கட்சித் தலைவர் திரு ஆர் சிவா கூறினார். மாநில அந்தஸ்து பெற டெல்லி சென்று போராட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். இதற்கு என் ஆர் காங்கிரஸ் தயார் என்றும் எல்லா கட்சிகளும் தயாரா என்றும் முதலமைச்சர் திரு ரங்கசாமி வினவினார். மாநில அந்தஸ்து மிக மிக அவசியம் என்றும் முன்பிருந்த சூழல் மாறி தற்போது ஆளுநர்கள் தங்களுக்கே அதிகாரம் எனக் கூறி வரும் நிலையில், சங்கடமான நிர்வாகச் சூழலுக்கு இடையில் தான், தேர்தலின் போது மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை தாங்கள் நிறைவேற்றி வருவதாகவும் சிலவற்றை செய்ய முடியவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். முன்னதாக மறைந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சுப்புராயன், முன்னாள் நீதிபதி தாவீத் அன்னுசாமி, மகாராஷ்டிர துணை முதலமைச்சர் அஜித் பவார் ஆகியோரின் மறைவுக்கு சட்டமன்றத்தில் இரங்கல் தெரிவிக்கப்பட்டது. பத்ம ஸ்ரீ விருது அறிவிக்கப்பட்டுள்ள, சிலம்பக் கலைஞர் திரு பழனிவேலுவிற்கு, அவையில் பாராட்டு தெரிவிக்கப்பட்டது. திட்டமிட்ட அலுவல்களை முடித்த பின்னர் புதுச்சேரி சட்டமன்றத்தின் அலுவல்கள், மறுதேதி குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்பட்டன.

***<u>ரங்கசாமி-பணி ஆணை</u>***

புதுச்சேரி அரசின் வேளாண் துறையில், 2016-ஆம் ஆண்டு முதல் பணிபுரிந்து வரும் 71 செயல்விளக்க உதவியாளர்களக்கு, முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று பணி நிரந்தர ஆணைகளை வழங்கினார். இவர்களுக்கு Field-Man பதவி உயர்வு வழங்க ஏதுவாக நியமன விதிகளை திருத்தவும் அதிகாரிகளுக்கு அவர் உத்தரவிட்டார். சட்டப்பேரவையில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியின் போது,

வேளாண் அமைச்சர் திரு ஜெயக்குமார், அரசுக் கொறடா திரு ஏ கே டி ஆறுமுகம், மற்றும், வேளாண் துறை அதிகாரிகள் உடன் இருந்தனர்.

<u>புதுச்சேரி-தணிக்கை</u>

புதுச்சேரியில், 2023-மார்ச் 31-ஆம் தேதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான, இந்திய தணிக்கை துறை தலைவரின் இணக்க தணிக்கை அறிக்கை, இன்று வெளியிடப்பட்டது. தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பகுதிகளுக்கான முதன்மை கணக்காய்வு தலைவர் திரு திருப்பதி வெங்கடசாமி முதுநிலை துணை கணக்காய்வுத் தலைவர் திரு சுகேந்திரன் ஆகியோர், தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில் இந்த அறிக்கையை வெளியிட்டனர். புதுச்சேரியில் கடந்த 12 ஆண்டுகளாக நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தல் நடத்தப்படாததால், நகராட்சி நிர்வாகத்தில் மக்கள் பங்கேற்க இயலவில்லை என்றும், 74-ஆவது அரசியல் சாசன திருத்த சட்டத்தின் படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்க வேண்டிய அதிகாரங்கள் முழுமையாக வழங்கப்படவில்லை என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தகுதியற்ற அரசு ஊழியர்களுக்கு இலவச அரிசி, ஒரே ரேஷன் அட்டைக்கு 2 முறை பணம், அதிக எண்ணிக்கையில் நிலுவையில் உள்ள ஓய்வூதிய விண்ணப்பங்கள், மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்படாத நிலை, முன் கூட்டியே இடத்தெரிவு செய்யாமல் பணிகள் தொடங்கப்பட்டதால் நிதி இழப்பு போன்ற பல்வேறு குறைபாடுகளும் இணக்க தணிக்கை அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

***காரைக்கால்-ஆட்சியர்***

காரைக்கால் மாவட்டத்தின் புதிய ஆட்சியராக இஷிதா ரதி ஐஏஎஸ் இன்று பொறுப்பேற்றுக் கொண்டார். அவர் இதுவரை, புதுச்சேரி வடக்குப் பகுதி துணை ஆட்சியராக பதவி ஏற்று வந்தார். இதுவரை காரைக்கால் மாவட்ட ஆட்சியராக இருந்த திரு ரவி பிரகாஷ் ஐஏஎஸ் புதுச்சேரியில் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாடு உள்ளிட்ட துறைகளுக்கான அரசுச் செயலராக மாற்றப்பட்டுள்ளார்.

***வானிலை***

நில நடுக்கோட்டை ஒட்டி உள்ள இந்திய பெருங்கடலின் கிழக்கு பகுதிகள், மற்றும், அதை ஒட்டிய தென் கிழக்கு வங்க கடல் பகுதிகளில், வரும் 15-ஆம் தேதி வாக்கில், காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகலாம் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. சூறாவளி காற்று வீசக் கூடும் என்பதால் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இன்று தென் தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழை இருக்கலாம் என்றாலும், தமிழகத்தின் இதர பகுதிகள் மற்றும் புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், வறண்ட வானிலையே நிலவும் என வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாளை நெல்லை,குமரி, தென்காசி, தேனி, விருதுநகர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் குறைந்த பட்சமாக உதக மண்டலத்தில், 6.6 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவாகி உள்ளது.

*கிரிக்கெட் (9)*

உலக கோப்பைக்கான ஆடவர் 20-ஓவர் கிரிக்கெட் போட்டித் தொடரில் இன்று மாலை டெல்லியில் நடைபெறும் போட்டியில், இந்தியா-நமீபியா அணிகள் மோத உள்ளன. முன்னதாக நேபாளம்-இத்தாலி அணிகளுக்கு இடையே, மும்பையில் இன்று நடைபெற்ற மற்றொரு போட்டியில், இத்தாலி அணி, 44 பந்துகள் எஞ்சி இருந்த நிலையிலேயே, 10 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இலங்கை-ஓமன் அணிகளுக்கு இடையே, இன்று கண்டியில் நடைபெற்ற போட்டியில், இலங்கை அணி, 105 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

*□ாநிலங்களவை-கூடங்குளம்*

கூடங்குளம் அணு மின் நிலையத்தின் 3-ஆம் பிரிவு நடப்பாண்டிலும், 4-ஆம் பிரிவு அடுத்த ஆண்டிலும் கட்டி முடிக்கப்படும் என பிரதமர் அலுவலக இணை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் இன்று மாநிலங்களவையில் தெரிவித்தார். புவி-அரசியல் சூழல்களால், இத்திட்டம் பாதிக்கப்ப மாட்டாது என்று, அவையில் கேள்வி நேரத்தின் போது அவர் கூறினார். நடப்பு அரசின் வலுவான மனோதிடம் காரணமாக, திட்டப் பணிகள் தற்போது, ஸ்திரமாக முன்னேறி வருவதாக அவர் தெரிவித்தார்.